**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 267/2020** **P.W. 1**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha, Assistant of this court on 18.02.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | முருகேசன் |
| Father Name: | கிருஷ்ணம்பிள்ளை |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். எந்த சர்வே எண் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ச.எண்.7/4, 7/5ற்கான நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ச.எண்.7/4 யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக எனக்கும், எனது சகோதரர்கள் பெயரிலும் உள்ளது. எங்களது சகோதரர்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் பாகப்பிரிவினை செய்துகொண்டோம். ச.எண்.7/4ல் உள்ள 44 செண்ட் நிலத்தை நாங்கள் சகோதரர்கள் பொதுவில் 1/4 பாகமாக ஒதுக்கிக்கொண்டு கூட்டாக அனுபவித்து வருகிறோம். ச.எண்.7/5 ஆனது என்னவாக உள்ளது என்றால் கிணறு பாகமாக உள்ளது. மேற்படி ச.எண்.7/5 ஆனது 8 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. ச.எண்.7/5ல் எனக்கு 4/8 பங்கு உள்ளது என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியான பானுமதி என்பவருக்கு ச.எண்.7/5ல் எவ்வளவு பங்கு உள்ளது என்றால் 3/8 பங்கு உள்ளது. மீதியுள்ள 1/8 பங்கு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. மேற்படி ச.எண்.7/5 கிணறுபாகத்தில் எனக்கும், இவ்வழக்கு 4ம் பிரதிவாதிக்கும் பிரச்சினை உள்ளதா என்றால் பிரச்சினை எதுவும் இல்லை. எதற்காக 4ம் பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், மேற்படி பொதுக்கிணற்றில் நான் மின்இணைப்பு பெறுவதற்கு மனு தாக்கல் செய்திருந்தேன் அதை மேற்படி 4ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்திருந்ததால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன்.

எந்த தேதியில் மின்வாரியத்திடம் மனு கொடுத்தேன் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை ஆனால் 2016ம் வருடம் கொடுத்தேன். 2016ம் வருடம் கொடுத்த மனுவில் பூந்தோட்டம் சர்வீஸ் இணைப்புக்காக கொடுத்தன் பேரில் 4ம் பிரதிவாதி ஆட்சேபணை செய்திருந்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளான மின்வாரியத்திடம் மேற்படி மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்று கேட்டுத்தெரிந்துக்கொண்டேனா என்றால் நேரில் சென்று கேட்டுத்தெரிந்துக்கொண்டேன். நான் கொடுத்த மனுவின் பேரில் ஆட்சேபணை தெரிவித்தது குறித்தும் 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்ட கருத்துரையும் கேட்டு பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 4ம் பிரதிவாதி ச.எண்.7/5 பொதுக்கிணற்றில் கூட்டுதாரர் என்பதால் அவரிடமிருந்து மின்இணைப்பு வழங்க ஆட்சேபணை அவருக்கு இல்லை என்று கடிதம் பெற்றுவருமாறு 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். அதன்பேரில் நான் 4ம் பிரதிவாதியிடம் கேட்டபோது அவர் தரமறுத்துவிட்டார். அதனால் 1 முதல் 3 பிரதிவாதிகள் கேட்டதற்கிணங்க 4ம் பிரதிவாதியிடமிருந்து கடிதம் பெற இயலவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான்கோரிய பூந்தோட்ட மின்இணைப்பானது விவசாயம் செய்வதற்காக கொடுக்கப்படும் மின்இணைப்பு என்றும் அதற்கு மாதந்திரம் கட்டணம் வசூலிப்பார்கள் என்றும் சொன்னால் சரிதான். நான் மின்இணைப்பு கோரிய காலத்தில் பொதுக்கிணற்றில் விவசாய மின்இணைப்பு கொடுப்பதற்கு அந்த கிணற்றில் கூட்டுபாகஸ்தராக உள்ள நபரிடம் ஆட்சேபணை பெற்றுவரவேண்டும் என்று விதிமுறை உள்ளது என்றால் அந்த விதிமுறை எனக்கு தெரியாது. நான் 2016ல் மனு கொடுத்த பின்னிட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 2017 காலகட்டம் வரையிலான என் மனுவின் மீதான எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நான் நேரில் சென்று தெரிந்துக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். 2017ல் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டும் மின்வாரியத்திடம் சென்று மேற்படி மனுவின் மீது என்ன

நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை கேட்டுத்தெரிந்துக்கொண்டேனா என்றால் கேட்டுத்தெரிந்துக்கொண்டேன் ஆனால் மின்இணைப்பு கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

எனது கூட்டுதாரரான 4ம் பிரதிவாதியிடமிருந்து ஆட்சேபணையில்லா கடிதத்தை பெற்று வராத காரணத்தினால் 1 முதல் 3 பிரதிவாதிகளால் மேற்படி என் மனுவை ரத்து செய்யப்பட்டது என்றால் ரத்து செய்த விவரம் வழக்கறிஞர் மூலம்தான் தெரிந்துக்கொண்டேன். மேற்படி ரத்து தொடர்பாக நான் எவ்வித அறிவிப்பும் பெறவில்லை. கடந்த 30.06.2017ம் தேதியன்றே மின்வாரியத்திடமிருந்து மேற்படி மனு ரத்து செய்யப்பட்டது குறித்து எனக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி கடிதத்தை நான் பெற்றுக்கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மனு ரத்து செய்யப்பட்டது குறித்து வழக்கறிஞர் மூலம் விபரம் அறிந்த பின்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பும், புகார் மனுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன்.

தற்போது 2020ம் வருடம்தான் கூட்டுக்கிணற்றிற்கு மின்இணைப்பு கேட்கும்போது மற்ற கூட்டாளிகளின் சம்மத கடிதம் தேவையில்லை என்று அரசு அரசாணை பிறப்பித்த விவரத்தை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக் கொண்டேன். மேற்படி 2020ல் அரசு அரசாணை பிறப்பித்த பின்பு புதியதாக மின்வாரியத்திடம் மின்இணைப்பு வழங்குமாறு மனு கொடுத்துள்ளேனா என்றால் இலவச மின்இணைப்பிற்கான மனு கொடுத்துள்ளேன். மேற்படி மனு மற்றும் அதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி இலவச மின்இணைப்பு மனுக்களானது வரிசைப்படிதான் மனுதாரர்களுக்கு மின்இணைப்பு வழங்கப்படும் என்றால் சரிதான். மேற்படி 2020ம் வருடத்திற்கு பின்பு நான் புதியதாக கொடுக்கப்பட்ட மனுவை குறித்து வழக்கில் சொல்லாமலும் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யாமல் தற்போது வழக்கிற்காக மனு கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எனவே 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் 1 முதல் 3

பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆகவே 1 முதல் 3 பிரதிவாதிகள் பொறுத்து தாவா தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

**Sd/E.Ridhula**
**DM,SDM.**

**Sd/Murugesan(PW1)**